## ஆகஸ்ட் - 13- பொதுக்கால 19ம் வார ஞாயிறு

### “துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள்” (மத். 14:27)

**முதல் வாசகம் : 1 அரசர் 19 : 9, 11 - 13**

அவர் அங்கிருந்த குகைக்கு வந்து, அதில் இரவைக் கழித்தார். அப்போது ஆண்டவரது வாக்கு அவருக்கு வந்தது. அவர் ”எலியா! நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்று வினவினார். அப்போது ஆண்டவர், ”வெளியே வா் மலைமேல் என் திருமுன் வந்து நில். இதோ! ஆண்டவராகிய நான் கடந்து செல்லவிருக்கிறேன்” என்றார். உடனே ஆண்டவர் திருமுன் பெரும் சுழற்காற்று எழுந்து மலைகளைப் பிளந்து பாறைகளைச் சிதறடித்தது. ஆனால் ஆண்டவர் அந்தக் காற்றில் இல்லை. காற்றுக்குப் பின் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்திலும் ஆண்டவர் இருக்கவில்லை. நிலநடுக்கத்திற்குப் பின் தீ கிளம்பிற்று. தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை. தீக்குப்பின் அடக்கமான மெல்லிய ஒலி கேட்டது. அதை எலியா கேட்டவுடன் போர்வையினால் தம் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து குகையின் வாயிலில் நின்றார். அப்பொழுது, ”எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்று ஒரு குரல் கேட்டது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் பேரன்பையும் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்

**இரண்டாம் வாசகம் : உரோமையர் 9 : 1 – 5**

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவைச் சார்ந்த நான் சொல்வது உண்மை, பொய்யல்ல. தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி.உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும் உண்டு.என் சொந்த இனத்தைச் சேர்ந்த என் சகோதரர் சகோதரிகளுக்கு மீட்பு கிடைப்பதற்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகக்கூட விரும்பியிருப்பேன்.வர்கள்தாம் இஸ்ரயேல் மக்கள் அவர்களையே கடவுள் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். அவர்கள் நடுவில்தான் கடவுள் தம் மாட்சியை விளங்கச் செய்தார். உடன்படிக்கைகளும் திருச்சட்டமும் திருவழிபாடும் வாக்குறுதிகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. குலமுதல்வர்களின் வழிவந்தவர்கள் அவர்கள் மனிதர் என்னும் முறையில் கிறிஸ்துவும் அவர்களிடமிருந்தே தோன்றினார். இவரே எல்லாவற்றுக்கும் மேலான கடவுள் என்றென்றும் போற்றுதற்கு உரியவர். ஆமென்.

**நற்செய்தி : மத்தேயு 14 : 22 – 33**

அக்காலத்தில் இயேசு கூட்டத்தினரை அவ்விடத்திலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது சீடரையும் உடனே படகேறித் தமக்குமுன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப் படுத்தினார். மக்களை அனுப்பிவிட்டு, அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார். பொழுது சாய்ந்தபிறகும் அங்கே அவர் தனியே இருந்தார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு வார இறைவார்த்தைகள் இறைமகன் இயேசு கொணர்ந்த இறையரசில் நாம் அனைவருமே நிறைவாழ்வை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான நிறைவாழ்வை நாம் பெற்றுக்கொள்வதற்கு எம்மிடம் இறை நம்பிக்கையும், கடவுள் மீதான விசுவாசமும் இருத்தல் அவசியம். கடவுள் எப்போதும் எங்களுடன் இருக்கின்றார் என்று நம்பிக்கையோடு வாழ்வோமேயானால் நம் வாழ்வில் வருகின்ற அச்சம் நிறைந்த சூழ்நிலைகளையும், ஆபத்தான நேரங்களையும் தைரியத்தோடு எதிர்கொண்டு வெற்றிகாணமுடியும் என்ற உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. இறைவாக்கினரான எலியா கடவுளை சந்திப்பதற்காக மலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார். அங்கு வீசிய காற்றின் ஒலியில் கடவுளைக் காண்கின்றார். இயேசுவும் வேண்டுதல் செய்வதற்காக மலைக்குச் செல்கின்றார். அங்கே செபத்தின் முக்கியத்துவம் வெளிப்படுவதை நாம் பார்க்கின்றோம். கடலில் பயந்து நடுங்கியவாறு படகில் நின்ற சீடரை நோக்கி “துணிவோடிருங்கள் நான் தான் அஞ்சாதீர்கள்” (மத். 14:27) என இயேசு உற்சாகப்படுத்துகின்றார். பேதுரு இயேசுவை உற்று நோக்கியவாறு நீரில் நடந்தார். ஆனால் அலையையும், காற்றையும் கண்டு பயத்தில் மூழ்கினார். நாமும் பல தடவைகளில் நம்பிக்கையை இழந்தவர்களாக தடுமாற்றம் அடைகின்றோம், நமது கிறிஸ்தவ பயணத்திற்கு விசுவாசம் அவசியமானது என்பதை மறந்து விடுகின்றோம். இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு இயற்கையையும், தீமையையும், பேய்களையும் வென்றவராக காட்சி தருகின்றார். இயேசுவில் கண்பதிப்போம். விசுவாசத்தில் தடம் புரளும் நம் இதயங்கள் புத்துணர்வுபெற்ற புதுவாழ்விற்கு உயிர்த்தெழட்டும்.